
Reg sered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15




# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்: 389

அன்டனா
அலுமினியம் லூவர்ஸ்,
ஸ்லொட்டட்
ஆங்கிள் அயன்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்குமிடம்:-
கதிர்ஹாட் வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 சித்திரை 24 ரபி:அவ் 11 (7—5—71) வெள்ளிக்கிழமை இதழ் 84

# பயங்கரவாதிகள் இருக்கும் பகுதிகளில் ராணுவ தாக்குதல்

## சரணடைய மேலும் அவகாசம்

கோட்டை, வெள்ளி

பயங்கரவாதிகள் ஒழிந்திருக்கும் பகுதிகள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தவிருப்பதாகவும், எவ்வாறுயினும் சரணடைய விரும்பும் பயங்கரவாதிகளை இராணுவமும், பொலிசும் ஏற்றுக்கொள்ளுமென்றும் நேற்று அரசாங்கம் அறிவித்தது.

சரணடைவதற்கு பிரதமர் தெரிவித்த சலுகையைப் பயன்படுத்தி திருந்திநடக்காமல் பிடிவாதமாக சில சில இடங்களில் பயங்கரவாதிகள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருவதாகவும் பயங்கரவாதிகள் ஒழிந்திருக்கும் பகுதிகள் மீது ராணுவதாக்குதல் நடாத்த விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குருநாகலை மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் கிராம சேவையாளர் அலுவலகம் தமாற்றுந்தோர் கிராமசபை அலுவலகம் ஆகியன மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வவனியா, அனுராதபுரம் ஆகிய இடங்களில் பயங்கரவாதிகளை எதிர்த்து இராணுவம் போர் நடத்தியுள்ளது. மொனராகலையிலும் இதுபோன்ற சம்பவம் நடந்துள்ளது.

இது இவ்வாறிருக்க சரணடைந்த பயங்கரவாதிகளை வகைப்படுத்தும் ஒழுங்குகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொண்டுள்ளது. இது சம்பந்தமான மாநாடு ஒன்று அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில் நேற்று நடந்தது:

பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்ட

## அரசாங்க அதிபரிடம் ஆதரவு தெரிவித்த அரசியல்கட்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஏப்ரல் மாதம் 5-ம் திகதி பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் தலைதூக்கியிருந்த போது வடபகுதியிலுள்ள சகல அரசியல் கட்சித்தலைவர்களும் தங்கள் ஆதரவைத் தம்மிடம் தெரிவித்து கிளர்ச்சிக்காரர்களின் நடவடிக்கைகளை முறியடிக்க தமது பூரண ஒத்துழைப்பையும் உதவியையும் தரமுன்வந்ததாக யாழ் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகர நேற்று எம்மிடம் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ்கட்சி உட்பட சகல கட்சிகளினதும் தலைவர்கள் தம்மைச் சந்தித்து அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தபோது அரசாங்க அதிபர் நன்றி தெரிவித்ததுடன் உதவி தேவைப்படும் பட்சத்தில் அவர்களை அழைப்பதாகவும் அவர்களிடம் கூறினர்.

—...

## மெழுகுவர்த்தி விலைக் கட்டுப்பாடு

கோட்டை, வியாழன்

மெழுகுவர்த்தியின் விலை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 40 நடுத்தர மெழுகுவர்த்திகைக் கொண்ட பைக்கட்டின் விலையும் 8 பெரிய மெழுகுவர்த்தியைக் கொண்ட பைக்கட்டின் விலையும் 2 ரூபாவென நேற்று அரசாங்கம் அறிவித்தது. நடுத்தரத்தை 5 சதத்துக்கும் பெரியதை 25 சதத்துக்கும் வியாபாரிகள் சில்லறைக்கு விற்பனைசெய்யவேண்டும்;

## ‘ஜனநாயகத்தை பாதுகாப்போம்’

### வடமாகாண ஆசிரிய சங்கம் பிரதமருக்கு உறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை ஒழித்துக் கட்டுவதற்கு அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் தமது மனப்பூர்வமான ஆதரவையும் அளிப்பதென்று வடமாகாண ஆசிரிய சங்கம் பிரதமருக்கு உறுதி தெரிவித்துள்ளது.

‘ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் செல்வாக்குள்ள அரசாங்கத்துக்கு எதிரான பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் தேவையில்லாமல் உயிரிழப்பையும், அரசுக்கு விடுத்த நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

நிலைமை சுமுகமடைவதற்கு அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒத்துழைப்பை அளித்து ஜனநாயகத்தைப் பாதுகாக்கமுன்வருமாறு வடமாகாண ஆசிரியர் சங்கம் அழைப்புவிடுக்கிறது’ என்று பிரதமருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் வடமாகாண ஆசிரிய சங்கம் தெரிவித்துள்ளது.

## “மக்களின் ஆதரவின்றி இலங்கையில் புரட்சி”

### இந்திய ‘இந்து’ பத்திரிகை தலையங்கம்

புதுடில்லி, மே 6

இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்த பின்னரும் இன்னும் 4000 புரட்சியாளர்களும் அவர்களுக்கு ஆதரவாக 10,000 தீவிர ஆதரவாளர்களும் இலங்கையில் உள்ளனர். எனினும் இக்கிளர்ச்சிக்காரர் தொழிலாளர்களதோ அல்லது விவசாயிகளதோ ஆதரவைப் பெறவில்லை என்று ஏப்ரல் 26ம் திகதி வெளியான பிரபல்யம் வாய்ந்த இந்திய ‘இந்து’ பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில் இலங்கையின் கிளர்ச்சிபற்றி கூறப்பட்டுள்ளது.

அவ்வாசிரிய தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இதை நோக்குமிடத்து கைத் தொழிலாளர்களதோ அல்லதுவிவசாயிகளதோ ஆதரவைப் பெறாது பொலிவிய அரசாங்கத்தைக் கவிழ்க்க முனைந்த சேகுவேராவின் நடவடிக்கைகளை இவர்களும் பின்பற்றுவதைக் காட்டுகின்றது. தனது புரட்சியின் நோக்கம் அறிவிக்கப்பட்டதும் அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் தனது இயக்கத்தில் சேரவேண்டும் என்பதே சேகுவேராவின் நோக்கமாகும். சேகுவேரா ஒரு கம்யூனிஸ வாதியாகவிருந்தும் மார்க்ஸிஸ கொள்கையில் இருந்து விலகி [illegible] அதாவது புரட்சியை ஆரம்பிக்கு முன்னர் சேகுவேரா மக்களை ஒன்று திரட்டத் தவறிவிட்டான்.

இலங்கை கிளர்ச்சியாளர்கள் தோட்டப் பகுதிகளில் தங்கள் நடவடிக்கைகளை ஆரம்பித்துச் சில நாட்கள் தொடர்ந்து நடாத்தினாலும் அப்பகுதிகளில் உள்ள நகரப்புறத்தினர் இவர்களுக்கு ஆதரவுகொடுக்க முன்வராததால் இவர்கள் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளனர்’

பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா வானொலி மூலம் பொதுமக்களுக்கு விடுத்த செய்தியில் தனக்கு புரட்சிவாதிகளின் பெயர்கள் அவர்கள் வதியும் இடங்கள் மற்றும் அவர்களது திட்டங்கள் விபரங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். எனவே உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுவதால் அவர்கள் பெரும் [illegible] விட்டனர்.

ஊரடங்கு
நேரம்
இன்று மாலை
7-30
மணி முதல்
நாளை காலை
4-30
மணி வரை

## வடபகுதிப் பாடசாலைகளுக்கு திடீர் விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாடசாலைகளுக்கு எல்லா ஆசிரியர்களும் காலை 8-00 மணிக்குச் சென்று பிற்பகல் ஒரு மணிவரை இருக்க வேண்டுமென்ற உத்தரவை தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் எல்லாப் பாடசாலைகளும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கல்வி அதிகாரிகள் பாடசாலைகளுக்குத் திடீர் விஜயஞ்செய்து நேரம் பிந்திச் சென்ற ஆசிரியர்கள், நேரம் முந்திச் சென்ற ஆசிரியர்கள், வராத ஆசிரியர்கள் ஆகியோரின் பட்டியல்களைச் சேகரித்துவருகின்றனர். இந்த ஆசிரியர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு இலக்காகலாமெனத் தெரிகிறது.

—

## ஐ. நா. குழு விஜயம்

புதுடில்லி, மே 6

கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கும் அகதிகளுக்கு உதவியளிப்பது பற்றி ஆராய மூவர் கொண்ட ஐ. நா. குழு ஒன்று புதுடில்லிக்கு வந்துள்ளதாகப் பாரத அரசு அறிவித்தது.

அறிவித்தல்

மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் கோவில் தேர் உற்சவம் 10-5-71 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும். 3266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுவேலி
## கி. ச. தலைவர் தெரிவு

அரியாலை, வியா.
அச்சுவேலி கிராமச்சபையின் புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 11-ம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும். முன்னைய தலைவர் திரு. சுந்தரமூர்த்தி அண்மையில் காலமானதால் இப் புதிய தலைவர் தெரிவு நடைபெறுகின்றது.

## ஆசிரியர் கியூ

பருத்தித்துறை, வியாழன்
கடந்த சில தினங்களாக பருத்தித்துறை இலங்கை வங்கியில் ஆசிரியர்களின் கியூக்கள் காணப்படுகின்றன. மேலதிக உத்தியோகத்தின் நியே இலங்கை வங்கி நிலைமையைச் சமாளித்து வருகிறது.

## அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாநகர சபை
### நீர் விநியோகம்

மாநகரசபை எல்லைக்குள் அமுலில் இருக்கும் நீர் விநியோக நேரம் பின்வருமாறு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறதென்பதைப் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

காலையில் 6-00 மணிமுதல் 8-00 மணி வரை. பிற்பகல் 4-00 மணி முதல் 5-00 மணி வரை.

ஆணையாளர்
மாநகரசபை,
3274 யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்
### அடைவுகடை இடமாற்றம்

யாழ்ப்பாணவூரி காரைநகரிலிருந்த வேலுப்பிள்ளை சண்முகநாதனின் அடைவு கடை இப்பொழுது 32A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது இது வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையிலுள்ளது.

வே. சண்முகநாதன்
3275

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தேநீர்க்கடை!
யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் (புகையிலைக் கிட்டங்கிக்கு அருகாமை) 'தேநீர்க்கடை' ஒன்று சகல தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு க. தம்பிராசா, 101, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்
2787

### விற்பனைக்கு

உழவு யந்திரம்:
நல்ல நிலையிலுள்ள லாண்ட்மாஸ்ரர் (Land-Master) உழவு யந்திரம், ரெயிலர், தண்ணீர் இறைக்கும் உபகரணங்களுடன் பார்வையிடலாம். இல 23, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம். 2786

தையலர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம் சகலவிதமான தையற்கலைகளும் குறைந்த கட்டணத்தில் 10-5-71 தொடக்கம் நடாத்தப்படும். இராணிமாளிகை 82/1 மணிக்கூட்டுவீதி. பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 2785

## மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில்
# மஞ்ச உற்சவம்

இப்புதிய மஞ்சம், சித்திரவேலைப்பாடுகள் அமைந்தது. 10-ஆம் திருவிழா உபயகாரரதும் உறவினரதும் ஒத்துழைப்பால் ஆக்குவிக்கப்பட்டது.

### 10-ம் திருவிழா விஞ்ஞாபனம்

8-5-71 சனிக்கிழமை விசேட அபிஷேக ஆராதனையுடன் உற்சவம் ஆரம்பமாகும் எனவே, அடியார்கள் அனைவரையும் வந்து முருகப்பிரானைத் தரிசித்துத் திருவருளைப்பெற்றேகுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

### நிகழ்ச்சிகள்

காலை 8 மணி விசேட அபிஷேக ஆராதனையும், காவடியும்.
" 10 மணி 'சிறுத்தொண்ட நாயனார் புராணம்' சொற்பொழிவு அருட்கவி சீ. விநாசித்தம்பி.
" 12 மணி மேளக் கச்சேரி, அன்னதானம்.

1. ஞானசுந்தரம் குழுவினர் 2. பத்மநாதன் குழுவினர்
3. பாலகிருஷ்ணன் " 4. சிதம்பரநாதன் "
5. சுந்தரமூர்த்தி " 6. காசமூர்த்தி "
7. கணேசு "

மாலை: 6 மணியளவில் பலவர்ண மின்சார தீபத்துடன் புதிய மஞ்சத்தில் ஷி மேளவாத்தியங்களுடன் முருகப்பெருமான் வீதிவலம் வருவார்.

சிகரம்: மல்லாகம் திருநாவுக்கரசு,
மத்தள சோடினை: இணுவில் பஞ்சாட்சரம்
இலிங்கம்
3267 10-ம் திருவிழா உபயகாரர்,

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி காலை10-00 பி.ப.1-30
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30 பி. ப 2-00
மாஸ்ரர் பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
வா ராஜா வா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப.1-30
எம்.ஜி.ஆர்.
சரோஜாதேவி
நம்பியார்—நாகேஷ்
மனோரமா மற்றும் பலர் நடித்த
படகோட்டி
(சரவணா சித்திரம்)
டைரக்ஷன்
T. பிரகாஸ்ராவ்

கெப்பிட்டல் காலை 10, பி.ப.1-30 மணி
கணவன்

ஹைலன் காலை 10, பி.ப 1-30 மணி
வாழவைத்த தெய்வம்

ஹிங்ஸ்லி காலை 10, பி.ப.1-30 மணி
அன்னை இல்லம்

பிளாஸா காலை 10, பி.ப 1-30 மணி
சர்வாதிகாரி

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(சரவணா சித்திரம்)

ஸ்ரீ காலிங்கன் இணுவில்
Daily 10-30 a.m. 3-30 p.m.
MURUTA

ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10-00பி. ப 1-45
ஷம்மிகபூர் - பபிதா நடித்த
தும்சே அச்சா கௌன் ஹை
(ஹிந்தி - கலர்)

வெஸ்லிசினிமா மானிப்பாய்
தினசரி காலை10 30, பி. ப. 2-30
ஏ. வி. எம். ராஜன்—சாரதா நடித்த
துலாபாரம்

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-15 பி ப. 1-45 மணி
திலீப்குமார் - வைஜயந்திமாலா நடித்த
லீடர்
(ஹிந்தி)
[சினிமாஸ்கோப் கலர்]

## குற்றம் செய்தவர்கள்
# 'எந்த அந்தஸ்திலிருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள்'
## ஆட்சிமன்றத்தில் கொல்வின்

கோட்டை, வியா
"சமீபத்திய சம்பவங்களுக்கான மூலகாரணத்தை விசாரித்து அறிவதற்காக தனித்தனியான புலன்விசாரணைகள் நடைபெறுகின்றன. இதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் எந்த அந்தஸ்திலிருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள்.

இவ்வாறு நேற்றிரவு தொழில் அரசியல் அலுவல் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா நேற்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசுகையில் இந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட வெளிநாட்டு நிருபர்கள் பொய்ச் செய்திகளைப் பரப்பினர்கள். ஆகவேதான் அவர்கள் அனுப்பப்பட்டார்கள். குற்றம் புரிந்தோர்மீது சட்டத்துக்குப் புறம்பான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறினர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா விடுத்த கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு பீலிக்ஸ் மேற்கண்டவாறு சொன்னார்.

கைதுசெய்யப்பட்ட ஒவ்வொரு பயங்கரவாதிகளும் தனித்தனியே விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். இந்தப் புலன்விசாரணைக்காக திரு. அலிக் அபயகுணவர்த்தனா தலைமையில் செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய இடங்களில் ராணுவ நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட... என்றும் திரு. பீ... டயஸ் பண்டாரநா... கூறினர்.

வீடமைப்பு அமை... திரு பீட்டர் கெனமன்... கையில் குழப்ப நி... போது பிரதமர் பொ... க்கும் திடமான ... புகைகளை வழங்கினு... றும் சரணடைந்தவ... மீது எவ்வித பலாத்கா... பிரயோகிக்கப்படவி... லையென்றும் தெரிவித்தா...

## 'இவர்களின் விபரங்கள் தேவையாம்'

பருத்தித்துறை, வியா'
ஏப்பிரல் மாதம் 3-ம். 4-ம், 5-ம் திகதிகளில் பாடசாலைக்குச் சமுகம் கொடுக்காத மாணவரின் விபரங்களைக் கல்வித்திணைக்களம் அதிபர்களிடம் கோரியுள்ளது. அதேபோல பெப்ரவரி 27, ஏப்ரல் 3 ஆகிய திகதிகளிலும், அதற்குப் பின்னரும் பாடசாலையில் கடமை செய்யத் தவறிய ஆசிரியர் ஆசிரியரல்லாத ஊழியர் ஆகியோரின் விபரங்களையும் அவர்கள் எக்காரணங்களால் லீவில் சென்றனர் என்றும் தகவல் தருமாறு சகல அதிபர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

## கூடியவிலைக்கு விற்றவர் கைது

அரியாலை, வியாழன்
ஆனைக்கோட்டைப் பகுதியில் மண்ணெண்ணையை கூடிய விலையில் விற்றதாக ஆனைக்கோட்டை பொலிசார் ஒரு வியாபாரியை கைது செய்ததுடன், பதுக்கி வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணையை ஸ்தலத்திலேயே கட்டுப்பாட்டு விலைக்கு விற்றனர்.

நாகம்ஸ் சினிமா கன்னாகம்
காலை 10-30, பி.ப. 2-00
ஜெய்சங்கர்-ஜெயலலிதா நடித்த
கௌரி கல்யாணம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Clint Eastwood
in
COOGAN'S BLUFF
(color)
தினசரி பி. ப. 2-00
எஸ். எஸ். ஆர் - விஜயகுமாரி நடித்த
ஆனந்தி

துப்பாக்கியை

## ஒப்படைக்காவிட்டால் கைது செய்யப்படுவார்கள்
### வடபகுதி பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி
வடபகுதியில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேரில்சென்று பார்வையிட்டார்.


பொலிஸாரின் பிரமாதமான சேவையை பாராட்டி பிரதமர் அனுப்பியிருந்த செய்தியைபொலிஸ் அதிபர் சகல பொலிஸ் நிலையத்திலும் காண்பித்தார்.

இதுவரை துப்பாக்கிகளை ஒப்படைக்காதவர்கள்கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்படுவார்களென்றும் அத்துடன் லைசென்ஸ் ரத்துச் செய்யப்படுமென்றும் பொலிஸ் அதிபர் தெ... தார்.


மன்... பகுதியிலி... வர்கள் தற்போது துப்ப... களை ஒப்படைத்துவரு... வும், அவர் தெரிவித்... வவுனியா பொலிஸ்நி... யையும் பொலிஸ் அ... நேரில் பார்வையிட்டா...

### புதிய கட்டிடம்


அரியாலை, வியா...
மானிப்பாய் கிராம... அலுவலகத்துக்கான ... கட்டிடம் ஆனைக்கோட்... ப்பகுதியில் நிருமாப்... வருகிறது.



பீ எச் சி
நெற் பூச்சி கட்டுப் பாட்டிற்கு
பீ எச் சி 10% தூள் சிறந்தது.
பீ எச் சி 6% துணுக்குகளும்,
பீ எச் சி 20% ம், தண்டு அரிப்புக்கு உகந்தது.




களைக்கொல்லி
'M-50'
'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக் 'களைக்கொல்லி,' 3-5 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெளித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்து அழிக்கவல்லது.




வெங்கிகம் இ...
செலிங்கோ ஹ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...த்தாலும் ...கள்'

...வின்

...ல் ராணுவ நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள் ' என்றும் திரு. பீலிக்ஸ் ...ல் பண்டாரநாயக்கா ...னர்.

...டமைப்பு அமைச்சர் பீட்டர் கெனமன்பேச ...யில் குழப்பங்களின் ...து பிரதமர் பொலிஸா ...ரும் திடமான பணிப் ...களை வழங்கிருரென் ... சரணடைந்தவர்கள் எவ்வித பலாத்காரமும் ...யோகிக்கப் படவில்லை ...என்றும் தெரிவித்தார்.

...விட்டால் ...படுவார்கள்

...வர் எச்சரிக்கை

...லில் அதிபர் தெரிவித்

... பகுதியில் ... தற்போது துப்பாக்கி ஒப்படைத்துவருவதாக அவர் தெரிவித்தார். ...ரியா பொலிஸ்நிலையத் ...யும் பொலிஸ் அதிபர் ... பார்வையிட்டார்.

### புதிய கட்டிடம்

அரியாலை, வியாழன் ...லிப்பாய் கிராமசபை ...வலகத்திற்கான புதிய ...டம் ஆனைக்கோட்டை ...தியில் நிறுவப்பட்டு ...றது.

சுகாதார தொழிலாளர்

# காலை 5-30 மணிக்கு வேலைக்குச்செல்லலாம்

## யாழ். மேயர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். மாநகரசபை சுகாதார தொழிலாளர் இன்று முதல் காலை 5-30 மணிக்கு வேலைக்கு செல்வதற்கான வசதியை யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா செய்துகொடுத்திருக்கிருர்.

ஊரடங்குசட்ட நிலை காரணமாக அதிகாலையில் வேலைக்கு செல்ல முடியாத நிலையிலிருப்பதாக மேயரிடம் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்க வடபகுதிசெயலாளர் திரு. எஸ். இராசையா இவ்விஷயமாக மேயரை சந்தித்தார். மேயர் இது சம்பந்தமாக சுகாதார அதிபருடன் தொடர்பு கொண்டு தொழிலாளருக்கு இந்த வசதியை ஏற்பாடு செய்தார்.

தொழிலாளர்கள் குறைபாடுகள் பற்றி யாழ்ப்பாண முதல்வர் திரு துரையப்பாவைச் சங்கதூதுக்குழு அடுத்த வாரம் சந்திக்கவிருக்கிறது. நியமன எம். பி திரு எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் செல்லும் இத்தூதுக்குழுவில் சங்கத் தலைவர் திரு அ சூசை, செயலாளர் திரு எஸ் இராசையா தனாதிகாரி திரு ஐ வேலன் ஆகியோர் இடம் பெறுவார்கள்.

—

### பொதுக்கூட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளது

புத்தூர், வியாழன்

தோப்பு அச்சுவேலி வாலிப முன்னேற்றக் கழகம் நாட்டின் தற்போதைய நிலைமையின் காரணமாக அதன் முதலாவதாண்டு நிறைவையொட்டி நடைபெறவிருந்த பொதுக் கூட்டத்தை ஒத்திப்போட்டுள்ளது.

மேற்படி கழகத்தினர் கூட்டம் நடத்தமுடியாமையைத் துண்டுப்பிரசுரம் மூலம் அச்சுவேலி மக்களுக்கு அறிவித்துள்ளனர். இச்சங்க செயலாளர், தலைவர், தனாதிகாரியாகியோர் ஆண்டறிக்கை, வரவு செலவுத்திட்டம் ஆகியவற்றை விரிவாக எழுத்துமூலம் வெளியிட்டுள்ளனர்.

### விசேஷ ஆராதனை

தாவடி, வியாழன்

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகராலயத்தில் எதிர்வரும் சித்திராபூரணைத் தினத்தன்று விசேட அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் "சித்திரைக் கஞ்சியும்" வழங்கப்படும்.

...

### கூட்டுறவுநிலையங்களில் சாரணர்

பருத்தித்துறை, வியா.

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சாரணர் குழுவினர் வடமராட்சிப்பகுதியிலுள்ள கூட்டுறவு நிலையங்களில் விநியோகத்துறையில் ஈடுபட்டுள்ளனர். இதனுல் நீண்ட வரிசையில் நிற்கும் மக்களின் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்யக்கூடியதாயுள்ளது.

### நூல் வெளியீட்டு விழா

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் யோகி வா. கார்த்திகேசு எழுதிய கந்தபுராண யுத்தகாண்ட உரை நூல் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை இந்து மன்றத்தினரால் வைகாசி மாதம் பறுளை சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த்திருவிழாவன்று வெளியிடப்பட விருக்கிறது. இந் நூல் வெளியீட்டு விழாவை முன்னிட்டு வழக்கம்போல சன சமூக நிலையத்தினர் 'நிலையக்குரல்' என்ற சிறப்பிதழ்ஒன்றை வெளியிடவுள்ளனர்.

...

### விசேஷ ஆராதனை

தாவடி, வியாழன்

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகராலயத்தில் எதிர்வரும் சித்திரா பூரணைதினத்தன்று விசேட அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் சித்திரைக்கஞ்சியும் வழங்கப்படும்.

# 'பயங்கரவாதத்தால் அரசை வீழ்த்திவிட முடியாது'

கம்பளை, வியாழன்

பயங்கரவாத நடவடிக்கைகளால் இந்த அரசாங்கத்தைப் பயமுறுத்திவிடவோ வீழ்த்திவிடவோ ஒருபோதும் எவருக்கும் இடம் கிடைக்கப் போவதில்லை அதேசமயம் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டி பொதுமக்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் வசதிகள் செய்துகொடுப்பதில் நிச்சயம் பின்நிற்கமாட்டாது.

இவ்வாறு கம்பளை ஆட்சி மன்ற உறுப்பினர் டி. எம். ஜயரத்ன கூறினார்.

கம்பளை ஸ்ரீலங்கா குழுக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே திரு. ஜயரத்ன இவ்வாறு சொன்னார்.

இந்தநாட்டின் வேலையில்லாதவர்களின் பிரச்னையையும், வசிப்பிடமில்லாதவர்களின் பிரச்னையையும் தீர்த்துவைப்பதற்கு மிகச் சிறந்த திட்டங்களை முன்வைத்து அவைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துவருகையில், தேசவிரோதிகளான பயங்கரவாதிகள் நாட்டில் இளைஞர்களை தவருன வழியில் இட்டுச்சென்று அமைதியைக் குலைத்திருக்கிருர்கள். இந்தப் பயங்கரவாதிகளின் தலைவர்களைக்கண்டு பிடித்து கடும்தண்டனைகள் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் அவசியமான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது என்றும் திரு. ஜயரத்ன கூறினர்.

இந்தக்கிளர்ச்சிகளை ஏற்படுத்தியவர்கள் வேலையற்ற இளைஞர்கள் அல்லவென்றும் அரசாங்கத்தைக் கவிழ்க்கவேண்டும் என்ற ஆசைகொண்ட சிலர்தான் இதனைத் தூண்டினர்கள் என்றும் அவர் குறிப்பிடுகிருர்.

வடபகுதி அசைஸ் விசாரணை

# 3 வருட நன்னடத்தை பிணையில் எதிரி சென்ருர்

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பளை கொலை முயற்சி வழக்கில் எதிரி 500 ரூபா பொறுப்பில் 3 வருட நன்னடத்தை பிணையில் சென்ருர்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் தெல்லிப்பளையில் 70ம் ஆண்டு மார்ச் 25-ம் தேதி நல்லான் அல்லிக்குட்டி என்பவர் ரி. செல்லத்துரையை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி கடும் காயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினர் எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ குணநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை இம்மாதம் 11ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.


கோட்டை, வியாழன்

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சு நாடு பூராவும் கைத்தறி. மின்தறி நிலையங்களை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது நாட்டில் 32 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கட்டான, டம்புள்ளை, ரக்தோட்டை, மாத்தறை, மின்னேரியா, மீரிகம ஆகிய இடங்களிலுள்ள ... மின்தறி நிலையங்களை இலங்கை கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் கையேற்றுள்ளது.

அரியாலை, வியா

நல்லூர் கிரிக்கெட்கோஷ்டிக்கும் நல்லூர் வடக்கு கிரிக்கெட் கோஷ்டிக்கும் இடையில் நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் நல்லூர் வடக்கு கோஷ்டி வெற்றி பெற்றது. விளையாட்டு பண்டாரக்குளம் மைதானத்தில் நடைபெற்றது.

# உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுக!

**களைக்கொல்லி 'M-50'**
...ம்பியிர' யிற் ஓர் ...சேஷ வகுப்பாடான ...க் 'களைக்கொல்லி,' ...வாரம்வரை வளர்ந்தி...ம் நெற்தானியத்தில் ...தழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் ...ந்து அழிக்கவல்லது.

**சுமித்தியன்**
ஓர் பாதுகாப்பான, நிச்சய கிருமிநாசினி. விசேஷமாக குமிழ் ஈ கட்டுப் பாட்டிற்கு உகந்தது.

**'என்ட்ரெக்ஸ்' 20**
இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமி நாசினி எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது.

**களைக்கொல்லி 'D'**
3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ்தர்' வகுப்பாடாகும்.

**'அசொட்றின்' 60**
ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்ற ழிக்க வல்ல, ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்.

**களைக்கொல்லி 'P-20'**
ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ்வேளை சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத் தலைத்தடுக்க இம்முறை உகந்தது.

**'ஸ்டாம்' எப்-34**
7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டீபிஎ சேர்வையாகும்.




...கம் இலங்கை லிமிட்டெட் LANKEM

செலிங்கோ ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333 இரசாயன சேவைக்கு மாறுசொல் லங்கெம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பயங்கரவாதிகள்

# சமயத்தலங்கள் மீதும் தாக்குதல் நடாத்துகிறார்களாம்!

கோட்டை, வியாழன்
பயங்கரவாதிகள் இப்போது சமய வழிபாட்டுத் தலங்களை சேதப்படுத்தி வருவதாக பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடிமக்களையும், அரசாங்கச் சொத்துக்களையும் பயங்கரவாதிகள் கடுமையாகத் தாக்கிவரும் அதேவேளையில் சமயவழிபாட்டுத் தலங்கள் மீதும் இப்போது தாக்குதல் நடாத்தத் தொடங்கியுள்ளனர்.

நம்புக்கனையிலுள்ள கோயில் ஒன்றுக்குப் பயங்கரவாதிகள் தீ வைத்துக் கோயிலை நாசப்படுத்தியுள்ளனர். கோயில் முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

## இளைஞர்களைக் கடத்தினர்

காலி மாவட்டத்தில் துப்பாக்கி முனையில் இரு இளைஞர்கள் கடத்திச்செல்லப்பட்டுள்ளார்கள். கடத்திச் சென்றதாகக் கூறப்படும் பயங்கரவாதிகளில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் இன்னொரு பயங்கரவாதி சரணடைந்துள்ளார்.

வவனியாவிலிருந்து ஒரு மைல் தூரத்தில் கூட்டுப் பாதுகாப்புப்படைமீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடாத்தியபோது 4 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். ராணுவ அதிகாரி ஒருவருக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும் சிறுகாயங்கள் ஏற்பட்டன. பாதுகாப்பு அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

## 62 பயங்கரவாதிகள் கொலலப்பட்டனர்

அநுராதபுர மாவட்டத்தில் மொரக்கொடையில் பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையில் நடந்த மோதலில் 62 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்படுகிறது. இம்மாதம் 3-ம் திகதி இச்சம்பவம் நடந்ததாக அறிவிக்கப்படுகிறது. இங்கு பொலிஸ் கான்ஸ்டபிள் அழகக்கோன் என்பவர் இம்மோதலின்போது மரணடைந்தார்.

## மக்களைத் தாக்குகின்றனர்

பொலநறுவையில் பொதுமக்களைப் பயங்கரவாதிகள் தாக்கிவருகிறார்கள். அவர்களுடைய சொத்துக்களைக் கொள்ளையடித்தும் நாசப்படுத்தியும் வருகிறார்கள். மின்னேரியா, சுமதிகிரியா, கரித்தலை என்னுமிடங்களில் உணவுப் பண்டகசாலைகளைக் கொள்ளையடித்துள்ளனர்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு பொதுமக்கள் இப்போது குழுக்கள் அமைத்து வருகின்றனர். தம்மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் அவர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காகவே பாதுகாப்புக் குழுக்களை அமைத்து வருகிறார்கள்.

## உற்சவம்

தாவடி, வெள்ளி
உயரப்புலம் உதிதுங்க விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் சென்ற மாதம் 28-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. பத்துத் தினங்கள் நடைபெறுகிறது பத்துத் தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் இன்றுடன் பூர்த்தியாகும்.

0 0

அரியாலை, வெள்ளி
திருநெல்வேலி சிவன் கோவிலில் கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 20 நாட்கள் திருவிழா நடைபெறும்.

0 0 0

தாவடி, வியாழன்
கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா இம்மாதம் 10-ந் திகதி சித்திரா பௌர்ணமி தினத்தன்று நடைபெறவுள்ளது.




புத்துயிர் ஊட்டும்
இனிய குளிர்பானம்

ஓர் யானை மார்க் உற்பத்தி

# அகதிகள் பிரச்னை பற்றி ஆராய ஐ. நா. குழு இந்தியா வரும்

புதுடில்லி, மே 6 ஐக்கியநாடுகளின் அகதிகளுக்கான கமிஷனர் இளவரசர் ஆஹாகான் கிழக்கு வங்காள அகதிகள் பிரச்னை பற்றி ஆராய இந்தியாவுக்கு குழுவொன்றை அனுப்பவிருக்கிறார். இத்தகவலை திரு ஆஹாகான் ஜெனிவாவில் தெரிவித்தார்.

கிழக்கு வங்காளத்திலிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு வந்தவர்களின் புனர்வாழ்வுபற்றி இந்திய அரசாங்கத்துடன் இக்குழு ஆலோசனைசெய்யவிருக்கிறது. ஐக்கிய நாட்டு அகதிகளின் உதவிக் கமிஷனரின் தலைமையில் மூன்றுபேர்கொண்ட இக்குழு விரைவில் புதுடில்லி வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுவீடனிலுள்ள கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு குழுவை அமைத்துள்ளனர். இக்குழுவுக்கு சுவீடன் எழுத்தாளர்களும் ஆட்சிமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்புக் கொடுத்து வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

### ஜாகர்த்தா பத்திரிகை கண்டனம்

பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகான் கிழக்கு வங்காளத்தில் நடத்திய படுகொலைகளும் விடுத்த உத்தரவுகளும் அங்கு எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளதாக ஜகார்த்தா டைம்ஸ் பத்திரிகை தனது விசேட கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளது. முஸ்லீம்கள் முஸ்லீம்களைக் கொலைசெய்துகொண்டிருந்தால் முஸ்லிம் மதம் எவ்வாறு உலகில் நிலைத்திருக்கமுடியும் எனவும் அப்பத்திரிகை வினாஎழுப்பியுள்ளது.

### பாக் இராணுவம் பின்வாங்குகிறது

கிழக்கு வங்காளத்தில் சிட்டகாங் அரங்கில் ராம்காட் பகுதியிலிருந்து பாகிஸ்தான் ராணுவத்தை விடுதலை வீரர்களின் கமாண்டோப் பிரிவு பின் வாங்கச்செய்துள்ளது. இந்த நகரை பாகிஸ்தான் படையினர் மும்முனைத்தாக்குதல் நடாத்திக் கைப்பற்றியிருந்தனர். இப்பொழுது பாகிஸ்தான் ராணுவத்தனரின் முக்கியமான தகவல் தொடர்புகளை விடுதலைவீரர்கள் துண்டித்துள்ளனர். திரிபுரா எல்லைக்கு அருகேயுள்ள ஆகவுராப் பகுதியில் 60 பாகிஸ்தானியத் துருப்புகளை விடுதலைப் படையினர் கொலைசெய்துள்ளனர். இந்தப் பகுதியில் இரவு முழுவதும் பீரங்கிச்சத்தம் கேட்டதாக எல்லையிலிருந்துவரும் செய்திகள் தெரிவித்தன. ஆகாடல் நகரை விடுதலைப் படையினர் பிடித்துள்ளனராம்.

### குழிகள் வெட்டுகின்றனர்

குச்பிகார் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் பாதுகாப்புக்குழிகளை வெட்டிவருவதாக அகில இந்திய வானொலி திருபர் தெரிவித்துள்ளார். முகக்கைட் மக்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இந்நகரத்திற்கு அண்மையிலுள்ள சரிணுபூர்நாலு நாளாக எரிந்து கொண்டிருக்கிறது. இப்பகுதி பெரும்பாலும் முஸ்லீம்கள் வாழும் பகுதிகளாகும்.

### அமெரிக்க அமைச்சர் தகவல்

கிழக்கு வங்காளமக்கள் மீது அமெரிக்காவினுல் கொடுக்கப்பட்ட போர் விமானங்களையும் டாங்கிகளையும் பாகிஸ்தான் துருப்புக்கள் பயன்படுத்தியுள்ளது உண்மைதான் என அமெரிக்க வெளியுறவு உதவி அமைச்சர் தெரிவித்துள்ளார், இந்த விஷயம்பற்றி அமெரிக்க செனட்டர்கள் நால்வர் கேட்டகேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் முகமாக இக்கடிதத்தை உதவிஅமைச்சர் இவர்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வுண்மையை ஒப்புக்கொண்டுள்ளார். சீனு பாகிஸ்தானைத்தாக்கினுல் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே இவ்வாயுதங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு கொடுத்ததென்றும் கிழக்கு வங்காள மக்கள்மீது அவ்வாயுதங்களைப் பயன்படுத்துவதை விட்டு அமெரிக்க அரசாங்கம் கவலை அடைகிறது என்று விக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குவங்காள நிலைமை பற்றி அமெரிக்காவின் செனட் வெளியுறவுக் கமிட்டி ஆராயவிருக்கிறது

## "பாராயணம் செய்வது அவசியம்"

அரியாலை, வியாழன் கெருடாவில் முருகன் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு பூர்த்தியடைந்ததை முன்னிட்டு கந்தபுராண பூர்த்திவிழா சென்றவாரம் நடைபெற்றது. திரு. எஸ். கயிலாயபிள்ளை தமது தலைமையுரையில் "நாட்டில் அமைதியும் ஒழுக்கும் நீதியும் பாதுகாக்கவேண்டுமாயின் மக்கள் மத்தியில் இறைபக்தியும், தெய்வ நம்பிக்கையும் வளர்க்க வேண்டும். மேற்கூறியவற்றை வளர்ப்பதற்கு சமய நூல்களாகிய புராண இதிகாசங்களை பாராயணம் செய்யவேண்டும். புராணங்களை படிப்பதினுல் மக்கள் மத்தியில் பக்தியும் தெய்வ நம்மையும் ஏற்பட ஏதுவாகிறது என்று கூறினர்.

## 150-வது ஆண்டு விழாவைக் கொண்டாடிய பத்திரிகை

லண்டன், மே. 6 அரசியல் சீர்திருத்தத்தையும் சமூக நீதியையும் இலட்சியமாகக் கொண்டு இயங்கி வரும் சர்வதேசப் பிரபல்யம் பெற்ற பிரிட்டிஷ் தினசரிப் பத்திரிகையான 'கார்டியன்' மே 5ம் திகதி தனது 150வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.

இப்பொழுது லண்டனில் பிரசுரமாகும் இப்பத்திரிகை ஆரம்பத்தில் ஒரு வார இதழாக 'மான்செஸ்டர் கார்டியன்' என்ன பெயரில் வெளியாகியது. சமுதாய சுதந்திரத்தையும் பாராளுமன்ற சீர்திருத்தங்களையும் வலியுறுத்துவதற்காக சிர்திருத்தவாதிகள் சிலரால் இப்பத்திரிகை 1821ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

சிறிய மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகையை உலகப்பிரசித்தி பெறச் செய்த பெருமை ஸ்கொட் குடும்பத்தினரைச் சார்ந்தது. இக்குடும்பத்தைச் சேர்ந்த சி. பி ஸ்கொட் என்பார் ஒரு தலைசிறந்த பத்திரிகாசிரியர். 25 வயது தொடக்கம் 85 வயது வரை இப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்து இப்பத்திரிகையை முன்னணிக்கு கொண்டு வந்தவர். இவரதுபேரனுன லோரன்ஸ் ஸ்கொட் தற்போது இப்பத்திரிகைக் கம்பனியின் நிர்வாக அதிபராகக் கடமையாற்றுகிறர்

அன்று தொடக்கம் இன்று வரை பிரிட்டிஷ் பத்திரிகைத் துறையின் சுதந்திர போக்கிற்கும் பத்திரிகா தர்மத்திற்கும் ஒரு உதாரணமாக இப் பத்திரிகைவிளங்கி வருகிறது. கம்பனி அதிபர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் தலையீடு எதுவுமின்றி தமது கருத்துக்களைத் தனிவாக வெளியிடும் சுதந்திரம் இப் பத்திரிகையின் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருவது இதன் சுயேட்சையான போக்கை எடுத்துக் காட்டுகிறது.

சமீபகாலத்தில் இப் பத்திரிகை பல பரிசுகளைப் பெற்றுள்ளது. 1970ம் ஆண்டின் சிறந்த பத்திரிகையாக கௌரவிக்கப்பட்டதுடன் இதன் ஆசிரியர் அலிஸ்டர் தெதரிங்டன் 1971ம் ஆண்டிற்கான சிறந்த பத்திரிகையாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.



### உத்தியோகப்பற்றற்ற பார்வையாளர்

யாழ்ப்பாணம், வெள்ளி ஏழாலையைச் சேர்ந்த திரு இ. பாலசுப்பிரமணியம் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சினுல் உடுவில் தொகுதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களினுலும், லங்கா சலுசலா நிறுவனத்தினுலும் நிர்வகிக்கப்படும் சலைடிப் போக்களும், கடைகளும் அத்துடன் விற்பனை வசதிலாகாவாலும் பொருள் கொள்வனவு இலாகாவாலும் நிர்வகிக்கப்படும் கூட்டுறவு யூனியன்கள் சங்கங்கள், சேகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றிற்கும் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் ஏழாலை தெற்கு மேற்கு கிராமுன்னேற்றச் சங்கத் தலைவரும், மல்லாகம் உடுவில் கோவிற்பற்று திடீர் மரணவிசாரணை அதிகாரியுமாவார்.

## முதலிடம்

எழுதுமட்டுவாள், வியா தச்சன்தோப்பு கலைவாணி சனசமூக நிலையத்திற்கும், கைதடி மின்னெளி மன்றத்தாருக்கும் இடையில் நடைபெற்ற கன்னைரி சுரபந்தாட்டப் போட்டியில் கலைவாணி சனசமூக நிலையம் முதலிடம் பெற்றது.

## "மக்களை அரசு கைவிட்டு விடாது"

வச்சுடுவா, வியாழன் கஷ்டப்படும் ஏழை மக்களினுல் தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்த அரசாங்கம் ஒரு போதும் ஏழை மக்களை கைவிட்டுவிடாது. அவர்கள் மத்தியிலிருந்து கொண்டு அவர்களுக்காகவே சேவை செய்யும். இன்று நாட்டில் உருவாகியுள்ள நிலைமைக்கான அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கவும் மக்களின் மேம்பாட்டுக்காக உழைக்கவும் அரசு உறுதி பூண்டிருக்கின்றது

இவ்வாறு களுத்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சம்லி குணவர்த்தன கூறினர்.

வச்சுடுவ சந்தையைத் திறந்துவைத்து திரு. குணவர்த்தன உரைநிகழ்த்தினர் கடந்த காலங்களில் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகக் கிடந்த ஏழைமக்கள் கடந்த தேர்தலின்போது கூட்டுமுன்னணியைப் பதவிக்குக் கொண்டுவந்தார்கள். அவ்வாறு ஆதரவளித்து வெற்றியைத் தேடித்தந்த மக்கள் அரசாங்கத்தைக் காப்பாற்றவும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று திரு. குணவர்த்தன குறிப்பிட்டார்

அரசாங்கம் அமைத்து ஒரு வருடம் கழிவதற்கு முன்பே இந்த நாட்டின் பல பிரச்னைகள் வெகுதூரம் தீர்த்துவைக்கப்பட்டன. இதேசமயம் வேலையற்றோர் பிரச்னை மிக முக்கியத்துவம் கொடுத்துக் கவனிக்கப்பட்டு வந்தது வாழ்க்கைச்செலவு அதிகரிப்பைக் குறைக்கவும் பெரிதும் முயற்சிகள் எடுக்கப்பட்டன என்றும் அவர் விளக்கினர்.

#### பாலஸ்தீனத்தில்

## மதச்சார்பற்ற அரசை இந்தியா ஆதரிக்கும்

புதுடில்லி, மே 6 பாலஸ்தீனத்தில் மதசார்பற்ற அரசொன்று அமைக்கப்படுமாலுல் அதை பாரதம் ஆதரிக்குமென இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்

அரபுலீக்கின் ஆதரவுடன் நடத்தப்படும் 6 நாள் பாலஸ்தீனக் கருத்தரங்கிற்கு அனுப்பி வைத்த செய்தியிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தரங்கில் 20 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

இஸ்லாம், யூதம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைச் சேர்ந்த சகலரும் இவ்வரசில் சமத்துவத்துடன் விளங்க வேண்டும் என திருமதி காந்தி மேலும் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

### றேஜர்ஸ் ஆலோசனை

மேற்காசியப் பிரச்னைபற்றியும் சூயஸ் கால்வாய் திறந்துவிடுவது பற்றியும் அமெரிக்க ராஜாங்கஅமைச்சர் திரு. றேஜர்ஸ் ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் வெளியுறவு அமைச்சர் தியாட் ஆகியோருடன் கெய்ரோவில் பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தை 6 மணி நேரம் நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதாயும் பயனுள்ளதாயும் இருந்ததாக எகிப்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திரு. வில்லியம் றேஜர்ஸ் இன்று ஜனாதிபதி சதாத்தை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சித்தியடைந்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் திரு ஆ சி பிறைசூடி நில அளவை உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

நீர்வேலியைச் சேர்ந்தஇவர் அத்தியார் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிகளின்பழைய மாணவராகும்.

## வேதபாராயணம்

அரியாலை, வியா நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலில் வருகிற 14-ம் திகதி நல்லூர் கணபதீஸ்வர குருகுல மாணவர்கள் பிரம்மஸ்ரீ கப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் வேதபாராயணம் செய்வார்கள்.

## இந்துசமய பிரசார சபையின் சமய அறிவுபோட்டி முடிவுகள்

அரியாலை, வியாழன் இலங்கை இந்துசமய பிரசாரசபை அகில இலங்கை அடிப்படையில் நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இப் போட்டிக்கு பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் மற்றும் சபைச் செயலாளர்கள் திரு. ஜெ. நாகேஸ்வரன், திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராஜா ஆகியோர் பொறுப்பாயிருந்தனர். பரிசுக்குரியவர்களுக்கு பரிசு வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமாம்.

போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு:

முதலாம் பரிசு: ச. வித்யாரத்தினம், ஆசிரியர், ஹைலன்ட்ஸ் கல்லூரி, அட்டன்.

இரண்டாம் பரிசு: சி. வடிவேற்பிள்ளை, செட்டித்தெரு நல்லூர்.

மூன்றும் பரிசு: ஆ. பேரின்பநாயகம், அட்டன்.

ஆறுதல் பரிசு பெறுவோர்கள்: ஆ. பேரின்பநாயகம், அட்டன். வெ. செந்தாமரை, அட்டன். சி. சுதந்திரதேவி, பண்டைத்தரிப்பு. சு. செல்வராணி, தொல்புரம் கிழக்கு. இரா. புவனேஸ்வரி, அட்டன். நா. பாலசுப்பிரமணிய சர்மா, அட்டன். மூ. பரமானந்தன், அட்டன். மூ. புஷ்பா, அட்டன்.

16 பேர் தராதரப்பத்திரம் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org